# யூலை- 07 - வெள்ளி

### தூய பத்தானேயுஸ்

**அல்லேலூயா! ஆண்டவருக்க நன்றி செலுத்துங்கள்: ஏனெனில் அவர் நல்லவர்! திபா. 106:1**

## முதல் வாசகம் : தொடக்க நூல் 23 : 1- 4

சாரா நூற்றிருபத்தேழு ஆண்டுகள் வாழ்ந்தார். சாராவின் வயது இதுவே.கானான் நாட்டிலுள்ள எபிரோன் என்ற கிரியத்து அர்பா நகரில் சாரா இறந்தார். அவருக்காகப் புலம்பி அழுவதற்காக ஆபிரகாம் சென்றார்.பிறகு சடலம் இருந்த இடத்தைவிட்டு அவர் எழுந்து இத்தியரிடம் சென்று சொன்னது. "நான் உங்களிடையே அன்னியனும் அகதியுமாய் இருக்கிறேன். என் வீட்டில் இறந்தாரை நான் அடக்கம் செய்வதற்கான கல்லறை நிலத்தை உங்களுக்குரிய சொத்திலிருந்து எனக்கு விற்று விடுங்கள்" என்று கேட்டார்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் அவர் நல்லவர்

## நற்செய்தி : மத்தேயு 9 : 9 - 13

அக்காலத்தில் இயேசு அங்கிருந்து சென்றபோது மத்தேயு என்பவர் சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்ததைக் கண்டார் அவரிடம், "என்னைப் பின்பற்றி வா" என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார்.பின்பு அவருடைய வீட்டில் பந்தியில் அமர்ந்திருந்தபோது வரி தண்டுபவர்கள், பாவிகள் ஆகிய பலர் வந்து இயேசுவோடும் அவருடைய சீடரோடும் விருந்துண்டனர்.இதைக் கண்ட பரிசேயர் அவருடைய சீடரிடம், "உங்கள் போதகர் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்?" என்று கேட்டனர்.இயேசு இதைக் கேட்டவுடன், "நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை."பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்" என்பதன் கருத்தை நீங்கள் போய்க் கற்றுக் கொள்ளுங்கள் ஏனெனில் நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்" என்றார்.

**தியானம் :** இறைவனது பிள்ளைகளாக தூய ஆவியானவரின் வழிநடத்தலினூடாக வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுக்கு பல தாலந்துகளைக் கொடுத்து அதை நல்ல முறையில் பயன்படுத்தி அதற்கமைய உண்மை வாழ்வு வாழ அழைத்திருக்கின்றார் இயேசு. ஆம் அவர் ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன் என்று பாகுபாடு பார்த்து அழைப்பவரல்ல, மாறாக பாவிகளாயிருக்கிற எங்களை தேடி வந்து அழைக்கின்றார். “நீமான்களையல்ல பாவிகளையே தேடிவந்தேன்” என்று (மத்.7:13)ல் இயேசு கூறுவதைப் பார்க்கின்றோம். ஏனெனில் எமது பாவங்களுக்காக பலவீனங்களுக்காக, குற்றங்களுக்காக அவமானப்பட்டு, பழிச்சொற்களை ஏற்றுக்கொண்டு எம்மை மீட்டெடுத்து புதுவாழ்வு தந்தார். நாங்கள் அதை மறந்து பாவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அன்று சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த மத்தேயுவை “என் பின்னே வா” என்று இயேசு அழைக்க அவரும் அவர் பின்னே சென்றார். இன்று எங்களையும் அவர் அழைத்திருக்கின்றார். அவர் அழைப்பிற்கு செவி மடுத்துள்ளோமா? அல்லது முயற்சியாவது செய்திருக்கினறோமா? மற்றவர்களை மன்னித்து வாழ்ந்துள்ளோமா? அல்லது மன்னிக்க முயற்சியாவது செய்திருக்கின்றோமா? சிந்தித்துப்பார்த்து அவ் அழைப்பிற்கு தடையாக உள்ள அனைத்து பாவச் செயல்களையும் விட்டுவிட்டு எம்மைத் தேடிவந்து மீட்டெடுத்த தெய்வத்திடம் எங்களை ஒப்புக்கொடுத்தவர்களாக அவர் அழைப்பை ஏற்று அவர் காட்டும் வழியில் நாமும் நடப்போம்.